
# காதிகோட்

## கவிதை நூல்




- மௌலவி காத்தான்குடி பௌஸ்
(ஷர்கி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காதிகோட்

## (கவிதை நூல்)



மௌலவி காத்தான்குடி பௌஸ்
(ஷர்கி)

வெளியீடு,
இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கம்
பாணந்துறை.
(பதிவு இல. PN/SS/CC/42)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| **Title** | : **QUAZI COURT** |
| **Subject** | : Poems |
| **Author** | : Moulavi Kattankudy Fouz<br>"Zaini Manzil"<br>23/6, Wattalpola Road,<br>Henamulla, Panadura. |
| **Publisher** | : Islamic Comminity<br>Renaissance Society<br>Panadura. |
| **Number of Pages** | : 50 |
| **Size** | : 4.5" x 7.75" |
| **Font Size** | : 11 pt. |
| **Paper** | : 70 gsm |
| **Copies** | : 300 |
| **First Edition** | : 19 FEB 2006 |
| **Typeset & Coverpage Design by** | : A. H. Ahamed Aslam<br>"Visual Computer System"<br>No. 391, School Road,<br>Henamulla, Panadura. |
| **Print by** | : Thisara Printers -<br>Gorakana, Moratuwa.<br>Tel. : 038-2297228 |
| **Copy right** | : Reserved |
| **Prize** | : 100/= |






## சமர்ப்பணம்

காத்தான்குடியின் மூத்த கவிஞர்
அப்துல் காதர் லெப்பைக்கும்
தத்துவக் கவிஞர் காத்தான்குடி
ஸபாஜி என் சகலனுக்கும்
சிங்கள உரையின் சிகரம் பாணந்துறை
அல்ஹாஜ் ஷாஹுல் ஹமீட்
அவர்களுக்கும்
இந்நால்

சமர்ப்பணம்...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதிப்புரை

மௌலவி காத்தான்குடி பௌஸ் ஷர்கி நவமணி தேசிய வார இதழில் தொடர்ச்சியாக எழுதிய கவிதைகளே **காதிகோட்** என்ற பெயரில் நூலுருப் பெற்றுள்ளன.

சமூகத்தைப் பற்றி சிந்திக்கும் மௌலவி பௌஸ், சமூகத்தின் பிரச்சினைகளையும் வெளிக் கொணர்கிறார். **காதிகோட்** என்ற இந்நூலில் இடம் பெற்றுள்ள 30 கவிதைகளும் சமூகப் பிரச்சினைக-ளையே விபரிக்கின்றன எனலாம். 01-09-2002 முதல் 04-05-2003 வரை வாரா வாரம் நவமணியில் எழுதியவற்றை தொகுத்து அவர் இந்நூலை வெளியிட்டிருக்கிறார்.

இத்தகைய ஆக்கங்களும் நூல்களும் காலத் தின் தேவைகளே. சமூகச் சிந்தனைகளை மக்கள் மன்றத்தில் முன்வைத்து அவர்களையும் சிந்திக்கத் தூண்டும் பணியை மௌலவி பௌஸ் முடிந்த வரை சிறப்பாகச் செய்துள்ளார்.

நவமணி ஆரம்பிக்கப்பட்ட நோக்கங்களில் ஒன்றை - சமூக எழுச்சியை தனது ஆக்கங்கள் மூலம் நிறைவேற்ற மௌலவி பௌஸ் முனைந் துள்ளார். அவருக்கு எமது பாராட்டுக்கள்.





சிந்திக்கத் தலைப்பட்டால் மட்டுமே சமூகம் எழுச்சி பெற முடியும். இந்த உண்மையை மௌலவி பௌஸ் உணர்ந்து செயற்பட்டுள்ளார். அவரது முயற்சியை ஊக்குவிப்பது சமூகத்திற்குச் செய்யும் சேவையாகும்.

**இவ்வண்ணம்**
**அல்ஹாஜ் எம்.பி.எம். அஸ்ஹர்**
சவ்துல்ஹக் - சாமஸ்ரீ சத்தியஜோதி -
ஊடகத் தளபதி - ஊடக ஜோதி -
எழுத்துலக வேந்தர் - இரத்தினதீபம்
பிரதம ஆசிரியர்
நவமணி தேசிய வாரஇதழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்புரை

அன்பும் அருளும் விழுமிய அல்லாஹ்வின் அருளால்....

பிறப்பும் இறப்பும் மனித வாழ்வின் நியதி. வாழ்வு எனும் பந்தத்தில் வாழும் மனிதனுடன் இன்னொருவருனும் வாழ்கின்றான். அவன் அந்நியன் அல்ல. ஒரு மாயன். மாதவன் அருளை நாடவேண்டிய மனிதன் மாயவன் மார்க்கத்தை நாடும் பொழுது அவனுக்கு அகிலம் மாயமாகிறது. வாழ்வு சூனியமாகிறது. வசந்தத்தை விட வருத் தத்தையே விலை பேசுவான். பணம், பொருள், வசதி, ஆசை என்ற குருட்டு ஊகத்தை மாயன் தோற்றுவிப்பான். இதில் திருமணம் என்ற புனித பந்தத்தை சாக்கடையாக்குவான். இந்தச் சாக்கடை துர்நாற்றத்தை அள்ளித் தெளிக்கும் இடம் **காதிகோட்.**

**அந்தக் காதிகோட்டில்** மாயன் உருவைக் காண் போர் இதயம் திறந்த மருந்து வில்லைகளாக கவிதைகளை உருவாக்கித் தந்துள்ளார், தத்துவ வித்தகர் மௌலவி காத்தான்குடி பௌஸ் அவர்கள். அவர் சிந்தனை ஓட்டத்தில் மலர்ந்த **காதிகோட்** கவிதை ஒவ்வொன்றும் மணியான தத்துவத்தை உணர்த்துகின்றது.






**காதிகோட்** என்பது பெண் ஒரு பக்கம் ஆண் ஒரு பக்கம் போராடும் போர்க்களம். மாயன் காட்டும் மருட்களம், இதைக் கவிதைக் களமாக உருவாக்கி நவமணி என்ற நற்பணி புரியும் நல்லதோர் பத்திரிகையிலே தொடராகத் தந்தார் எமக்காக. அந்த வித்தகரின் வித்தையிலே கருவாகி, உருவான கவிதைகள் ஒவ்வொன்றும் கற்றோரும், மற்றோரும் மறக்க வொன்னா வேத வாக்காகத் திகழ்கிறது. இந்நூலை பாணந்துறை இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கம் தமது கண்ணி வெளியீடாக வெளியிடுவதில் எமக்கோர் பெருமை. அந்தப் பெருமையில் இன்பம் காண இதைப் படிப்போர் படியாதோருடன் பகர்ந்து உண்டு பாடம் படிக்க வேண்டும் எனப் பகர்கின்றேன்.

**வளரட்டும் வித்தகரின் வினைத்திறன்**
**பெருகட்டும் அவர்தம் தத்துவத் தாமரைக்குளம்**
**அருளட்டும் அருளாளன் அன்பு வரம்**

**இவ்வண்ணம்**
**எம்.பீ.எம். நிஸ்வான்**
கதாசிரியர்,
முன்னாள் காதி நீதிபதி,
வத்தல்பொலை,
பாணந்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அணிந்துரை

புதுக்கவிதைகளின் வசந்தகாலம் என்று கூறும் அளவுக்கு இன்று இலக்கியப் பொய்கையில் புதுக் கவிதை நூல்கள் நிறைய பூத்துக்குலுங்கிக் கொண்டிருக்கின்றன. இத்தகைய மலர்களிடையே ஒரு வித்தியாச மலராக காதிகோட் கவிதை நூல் மலர்ந்து இதழ் விரித்திருக்கிறது.

இஸ்லாமிய தமிழ் இலக்கியம் என்றால், இப்படித்தான் அமைய வேண்டும் என்று துணிந்து ரைக்கக்கூடியவாறு இந்நூல் அதற்கான சகல தகுதிகளுடனும் காண்ப்படுகின்றது.

ஒரு நீர்த்துளியானது தாமரை இலை மீது விழுந்தால் அந்நீர்த்துளி அவ்விலையின் அசைவுக் கேற்ப உருண்டு புரண்டு ஊசலாடும் - வெறுந் தரையில் விழுந்தால் உறிஞ்சப்பட்டு உருத்தெரியா -மல் போய்விடும். சிற்பியினுள் விழுந்தால் அது முத்தாக பரிணாமம் பெறும். இவ்வாறே மௌலவி காத்தான்குடி பௌஸ் அவர்கள் இஸ்லாமிய நெறிமுறையின் ஒரு துளியை காதிகோட் கவிதை நூலில் நுழைத்து முத்தாக மிளிரச் செய்திருக்கி-றார்.

சமூகத்திலே புரையோடிப் போயிருக்கும் சீர்கேடுகள் பலவற்றுக்கு தக்க பரிகாரம் வழங்கி பிணி தீர்க்கும் சன்மார்க்க வைத்திய கலாநிதியாக விளங்கும் தத்துவ வித்தகர் மௌலவி காத்தான் குடி பௌஸ் அவர்களின் இலக்கியப் படைப்புக்





களின் ஒரு வெளிப்பாடாகவே காதிகோட் கவிதை நூல் கட்டியம் கூறி நிற்கிறது.

இவருடைய கவிதகைளில்.......

**“காலை எழுவாள் ஒன்பதிற்கு**
**காப்பி குடிக்க கடை செல்வேன்”**
**“வேலைக்காகச் செல்லும் நான்**
**வீடிந்தால் திண்ண ஒன்றுமில்லை”**

போன்ற கவிதை அடிகள் குடும்ப உறவில் அன்றாடம் நிகழும் விரிசல்களைத் தொட்டுக்காட்டி திருந்தி நடந்திட வழிகாட்டி நிற்கிறது. இப்படியே 30 கவிதைகளும் சமூகத்தை தட்டியெழுப்புகின்றன கவிஞரின் இத்தகைய சமூக சீர்திருத்தப் போக்கு காரணமாகவே காதிகோட் கவிதைகளுக்கு நவமணியின் கவிதாமணிகள் பகுதியில் தொடராக வெளிவர களம் கிடைத்தது. அப்போது இத்தொடர் கவிதைகளுக்கு வாசகர் மத்தியில் பெரும் வரவேற்பு காணப்பட்டதை உணர முடிந்தது.

இத்தகைய கவிதைகள் நூலுருப் பெறுவது காலத்தின் தேவையாகும். மௌலவி பௌஸ் அவர்கள் தொடர்ந்தும் இத்தகைய முயற்சிகளில் ஈடுபட வேண்டும். இம்முயற்சி இஸ்லாமிய தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு உதவுகிறது. மௌலவி பௌஸ் அவர்களின் பணி தொடர வாழ்த்துகிறேன்.

**இவ்வண்ணம்**
**ஏ.எல்.எம். சத்தார் (ஷபீக்)**
இரத்தின தீபம் - சேவைச் செம்மல் - அணிநடையாளன் - சொல்லின் செல்வன் - எழுத்தியல் நாயகன்
(நவமணி ஆசிரியர் பீடம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

கிழக்கில் தோன்றிய கலைப்பரிதி மேற்கில் பரிணமிப்பது போன்று பாணந்துறையில் காத்தான் குடி பௌஸ் மௌலவி சகலகலா வல்லவனாக கலைமிளிர்வது நாம் பெற்ற பாக்கியமே.

சன்மார்க்கச் செழுமைக்கு ஊர்மனை அல் முபாறக் ஜும்ஆ மஸ்ஜிதில் தொழில் புரிவது அவரின் ஜீவாதாரத் தொழிலாகும்.

பாணந்துறை இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கப் பணிகள் சடைத்து வளர அவருடைய இனிய தொடர்புகள் பலவாய்த்துள்ளதுடன் அவருடைய ஆதரவுகள் கனிசமான அளவு பெருகியுள்ளதும் நமக்குத் திருப்தியைத் தருகின்றது. பரோபகார நடவடிக்கைகளில், இன ஐக்கிய ஒன்றுகூடல்களில் அவரின் பங்களிப்பும் ஆசிகளும் சங்கமித்துள்ளன. எமது இயக்க முதலாவது வெளியீடாக பௌஸ் மௌலவி அவர்களின் **காதிகோட்** கவிதை நூலை வெளியிடுகின்றோம்.

பள்ளிவாசலில், கல்லூரிகளில், பல்வேறு விழா மேடைகளில் சொல்லமுதல் பொழியும் அவரை தத்துவ வித்தகர் என்ற பட்டம் சூட்டி நாம் பாராட்டி யுள்ளோம். **காதிகோட்** என்ற மகுடத்தில் நவமணி பத்திரிகையில் பிரசுரமான கவிமணிகள் எமது இதயத்தை ஈர்த்தன. அவை உணர்வூட்டும் மினி நாடகமா?, மணிக் கதைகளா? என்று மலைத்தோம்.





பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவலகால வகையினானே என்ற பரிணாம உணர்வோடு பழைய புராணங்களைக் கிளறாது சமய நெறிகளை வைத்து அரைத்த மாவை அரைக்கும் நிலமையை மாற்றி காலத்திற்கேற்ற யதார்த்தக் கோலமாக கவி புனைந்துள்ளார். சமுதாயத்தில் புண்ணாகிப் புரையோடிநாறும் சமகால தலாக் பிரச்சினைகளுக்கு உரிய மருந் தாக இக்கவிக்கோவை அமைந்துள்ளது.

காதலையும் மோதலையும் கவிதையாக்கும் இக்காலத்தில் சமுதாய இல்வாழ்வுப் பிரச்சினை களை சுட்டிக்காட்டி நல்ல தீர்வுக்கு குறிகாட்டும் கவிஞரின் வித்தியாசமான படையலின் போக் கையும் சாமாத்தியத்தையும் பாராட்டாமல் இருக்க முடியாது.

**காதிகோட்** கவியாரத்தில் 30 முத்துமணிகள் சித்தரிக்கப்பட்டுள்ளன. இயற்கையான பேச்சுச் சந்தத்தையும், உணர்வுநிலைக்கேற்ற அடியமைப் பையும், புதிய உத்திகளையும் கையாண்டு கவிதையாக வடிவமைத்து உருவத்திலும் உள்ள டக்கத்திலும் சுவைததும்பும் இலக்கிய விருந்தாக அள்ளி வழங்கும் **காதிகோட்** கவிதைக்கோவை போல பலநூல்கள் வெளிவர எல்லாம் வல்ல அல்லாஹ் நல்லருள் புரிவானாக! ஆமீன்.

**இவ்வண்ணம்**
**கலாபூசணம் மொயின் சமீம்**
தலைவர்,
பாணந்துறை இஸ்லாமிய
மறுமலர்ச்சி இயக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிக்கவிதை

நல்ல பல பண்புகளை நயமுடனே மற்றவர்க்குச்
சொல்லுவதே இவர் புரியும் வேலை - அதில்
வல்லவராம் பௌஸ் தமையே
வாழ்த்துவதில் மகிழ்வுகொள்ள
வல்லதொரு நாளின்
இன்பவேளை - இது
நல்லதொரு பண்புமிளிர் சோலை!

○○○○

போர்முனையில் ஆயுதங்கள்
குண்டுகளைத்தான் சொறிய
போராடும் கூட்டமன்றோ மாழும் - இவர்
கூர்மைமிகும் அறிவதனை
குறிப்பறிந்து தரும் படைப்பில்
பார் முழுதும் அறிவொளியோ வாழும்
அதன்
பார்வையிலே சன்மார்க்கம் மீளும்

○○○○

சாக்கடையாய் மாற்றி இந்த
சமுதாயத் தேக்கமதை
நோக்கமுடன் செயல்படுமோர் கூட்டம் - இதைப்
பூக்கடையாய் ஆக்குவதும்
புதுமனத்தை ஊட்டுவதும்
புதுயுகமாய் மாற்றும் இவர் நாட்டம் - அதில்
புரிகின்றார் அறிவியல் போராட்டம்

○○○○





காலமதன் கோலங்களைக்
கருத்தினிலே உரைக்கும் வண்ணம்
காத்திரமாயச் சொல்பவரும் இவரே - உயர்
தத்துவத்தின் வித்தகராம்
தன்னடக்கச் சொத்தி வராம்
தரணியிலே உயர்வுபெற வேண்டும் என்றும்
தலைவன் இறையருள் புரிய வேண்டும்

○○○○

**இவ்வண்ணம்**
**கலைமதி என். அஹமத் யாசீன்**
அதிபர்,
ஜீலான் மத்திய கல்லூரி,
ஹேனமுல்லை,
பாணந்துறை.

# என்னுரை

**பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்!**

பள்ளிவாசல் கதீபாகக் கடமையாற்றும் எனது வீட்டுக் கதவை காலையில் திறந்தவுடனேயே கண்ணீர் காவியங்களைச் சொல்ல பெண்களும் ஆண்களும் வழக்கமாக வருவார்கள். சிலர்கள் மார்க்கத் தீர்ப்பு அடிப்படையிலும் சிலர் தனது பிரச்சினைகளை இவரிடமாவது சொல்வோம் என்றும் வருவார்கள்.

காதிநீதிபதியாக இல்லாவிட்டாலும் காதியின் பாதியாக தீர்வுகளைக்கூற வேண்டி ஏற்படும். அத்தகைய சம்பவங்களை எல்லாம் சந்திக்கின்ற போது இவைகளை ஒன்றுதிரட்டி கவிதையாக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. அந்த வகையில் 30 கவிதைகளை யாத்து **காழிகோட்** எனும் தலைப்பிட்டு இலங்கைத் தேசிய பத்திரிகை -யான நமவணிக்கு அனுப்பினேன். அதனை 01-09-2002 முதல் 04-05-2003 வரை மிக சிறப்பாக பிரசுரித்தனர். அதனை ஊக்கப்படுத்தி பிரசுரித்த அல் அஸ்லம் ஏ.எல்.எம். சத்தார் அவர்களுக்கும் நவமணிப் பிரதம ஆசிரியர் அல்ஹாஜ் எம்.பி.எம். அஸ்ஹர் அவர்களுக்கும் நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளேன்.

நவமணியில் **காழிகோட்** என்று அறபு உச்சரிப் பை அப்படியே பயன்படுத்தினாலும் நாடளாவிய அரசு இயக்கங்களில் கூறப்படும் **காதிகோட்** என்ற சொல்லை இப்புத்தகத்திற்குப் பயன்படுத்திப் பெயர் வைத்துள்ளேன்.

இந்நூலை பாணந்துறையில் சமூகப்பணி செய்யும் இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கம்





வெளியிட்டு வைக்க முன்வந்ததை முகமலர்ந்து சந்தோசப்படுகின்றேன்.

இந்நூலுக்கு முகவுரை தந்த நவமணி பிரதம ஆசிரியர் அல்ஹாஜ் எம்.பி.எம். அஸ்ஹர், சிறப் புரை வழங்கிய முன்னாள் காதிநீதிபதி எம்.பி.எம். நிஸ்வான் ஜே.பி., அணிந்துரை வழங்கிய நவ மணி ஆசிரியர் பீடத்தைச் சேர்ந்த கவிஞர் ஏ.எல்.எம். சத்தார், வெளியீட்டுரை வழங்கிய கதாசிரியர் கலாபூசணம் மொயின் சமீம், ஆசிக் கவிதை வழங்கிய பாணந்துறை ஜீலான் மத்திய கல்லூரி அதிபர் கலைமதி யாசீன், புகைப்பட ஒருங்கிணைப்பாளர் நிருபர் எம்.கே.எம். அஸ்வர், அட்டைப்பட அறிமுகத்தை அழகுறச் செய்த கலைஞர் திக்குவல்லை சப்வான், இந்நூலை கணனி வடிவமைத்து தந்த எனது அருமை மாணவன் ஐ.ரி.என். தொலைக்காட்சி தமிழ் செய்தி கணனியாளர் ஏ.எச். அஹமட் அஸ்லம் அவர்களுக்கும், இதனை அச்சிட்டுத் தந்த அச்சகத்தார் திஸர பிரின்டர்ஸ் உரிமையாளர் திஸர அவர்களுக்கும், இந்நூலுக்காக இரவு இரவாக நித்திரா பங்கம் செய்த என் மனைவி ஐனுல் ரிபாயா அவர்களுக்கும், இதற்கான பணிகளில் தனது நேரத்தைப் பயன்படுத்திய அருமை மகன் அல்ஹாஜ் எம்.எப்.எம். ஸைனி அவர்களுக்கும், இதனை வாசிக்கும் சகல இலக்கிய நெஞ்சங்களுக்கும் எனது அன்பின் வாழ்த்துக்கள். எனது இஸ்லாமிய இலக்கிய முயற்சிகளை இறைவன் ஏற்றுக்கொள்வானாக. ஆமீன்.

**- மௌலவி காத்தான்குடி பௌஸ்**
23/6, ஸைனி மன்ஸில்,
வத்தல்பொல வீதி, ஹேனமுல்லை,
பாணந்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்



- விடிந்தும் விழிப்பில்லை 01
- தொழிலிலாத் தூக்கம் 02
- சின்ன வீட்டுச் சீரழிவு 03
- பழைய நண்பனுடன் படம் 04
- ஒரு பக்கச் செலவு 05
- அவள் பறந்து போனாளே 06
- பிரித்து விட்ட பிலிக்கா 07
- குடியைக் கெடுத்த குடி 08
- மண்ணாகிப் போன எண்ணம் 09
- குமர்களுடன் குதூகலிப்பு 10
- பேச்சுப் பிழையான போது 11
- வறுத்த ஓட்டு வதனம் 12
- எயிட்ஸ் வைரஸ் 13
- அரபுலக வாழ்வு 14
- குடு குலைத்த குடும்பம் 15
- கை நலைக்க வல்லவர் 16
- புதிய வானம் புதிய பூமி 17
- உறவுக்குள் உயிர் 18
- சந்தோசமிழந்த சந்தேகம் 19
- ஹராத்தில் மிதக்கும் ஹாஜி 20
- மாயக்காரியான வேலைக்காரி 21
- அதற்குப் பெயர் உடம்பா 22
- யாரை யார் வெல்லுவாரோ 23
- போனால் புஸ் வாழ்க்கை 24
- எஞ்சினை பிரி 25
- வாயிலும் தாய் பெரிது 26
- போகட்டும் பொல்லாப்பு 27
- குறட்டைக் குடும்பம் 28
- காலம் கடந்த ஞானம் 29
- பிள்ளைச் செலவைப் பேணு 30








# விடிந்தும் விழிப்பில்லை!



சேர்ந்து வாழ்தல் சிறப்பாகும்
சிறகொடிந்து வாழாதே!
தீர்வாய் காதி ஹதீஸ்களினை
திரட்டி வைத்தார் வழக்கினிலே
வியர்த்து நின்ற இளைஞனவன்
வேண்டாம் - இவள் என்றுரைத்தான்
சார்பாய் இருந்தோர் காரணத்தை
சமர்ப்பி! தம்பி! என்றார்கள்

OOOO

காலை எழுவாள் ஒன்பதிற்கு
காப்பி குடிக்க கடைசெல்வேன்!
வேலைக்காகச் செல்லும் நான்
விடிந்தால் திண்ண ஒன்றுமில்லை!
சாலி நாநா ஹோட்டலில்தான்
சம்பல் தோசை திண்கின்றேன்!
வேலையில்லை இவள் வாழ்க்கை
விட்டகலத் தீர்ப்பெடுங்கள்!


OOOO

நன்றி : நவமணி
01-09-2002



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிலில்லாத் தூக்கம்!



வேண்டாம் என்று ஏன் தங்கை
விடாப்பிடியாய் நிற்கின்றாய்?
ஆண் துணைதான் மிக உதவி
அழகாய் காதி எடுத்துரைத்தார்
"ஆண்டு இரண்டு மணமுடித்து
ஆண் குழந்தை ஒன்றுண்டு!
நீண்ட நாளாயத் தொழிலில்லை
நீட்டி நிமிர்ந்து படுக்கின்றார்"

○○○○

எந்தன் குடும்ப உறவுகளில்
எடுத்து எடுத்து செலவு செய்வேன்
உண்டு திண்டு படுக்கின்றார்
ஒரு பலனும் நடந்ததில்லை!
கண்ணே எந்தன் காதியாரே
கண்டிப்பாக தலாக் வேண்டும்
என்று பிடித்தால் என்செய்வார்
இன்னோர் தினத்தில் தவணைதான்!

○○○○


**நன்றி : நவமணி**

**08-09-2002**





# சின்ன வீட்டுச் சீரழிவு!



பிள்ளை பிள்ளை ஏன் அவரை
பிரிந்து விடப் - பிடிக்கின்றாய்?
மெல்லக் கேட்டார் காதியவர்
மெழுகாய்க் கரைந்து பதில் சொன்னாள்
எல்லா இரவு வேளையிலும்
இவர் வராமல் தூங்கிடுவேன்
நள்ளிரவில் இவர் வருவார்
நடுநிசியில் திறந்தெடுப்பேன்!

○○○○

களைத்துக் களைத்து உறங்கிடுவார்
கள்ளமாய் எழுந்து சென்றிடுவார்
விழித்து இவரைத் தேடிவந்தேன்
விஜிதான் வீட்டில் சிறு செட்டப்
குழியலறைக்குள் பெண்ணுடனே
குதூகலிக்க நான் கண்டேன்
தெளிவுகாணும் விசாரப்பில்
தீங்கை புருஷன் ஏற்று விட்டார்

○○○○


**நன்றி : நவமணி**

**22-09-2002**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழைய நண்பனுடன் படம்!



தம்பி! தம்பி! அவசரம் நீ!
  தலாக் மிகப்பெரும் பாவம்!
நம்பி உன்னை - வந்தவளை
  நடுத்தெருவில் விட வேண்டாம்
செம்மையாகக் காதியவர்
  சொன்னார் நல்ல அறிவுரைகள்!
வம்பாய் நின்றான் இளைஞனவன்!
  வாய் திறந்து பதில் உரைத்தான்!

OOOO

இரவில் நானோ தூங்குகிறேன்
  இவள் - அயல் இளைஞனுடன்
இரவு இரவாய்ப் படம் பார்ப்பாள்
  எல்லாம் முடிந்தே அவன் செல்வான்
முறைத்து இதனை நான் கேட்டால்
  முன்னர் இருந்து - இவள் அவனும்
சிறு பராயப் பிரன்ஸிப்பாம்!
  சீரழிவு இவள் வேண்டாம்!


OOOO

**நன்றி : நவமணி**
**29-09-2002**





# ஒருபக்கச் செலவு!



எனக்கு இரண்டு பிள்ளைகள்
  இரண்டாம் ஆண்டில் மூத்த மகன்
மனதுக்கினிய மர்ழியா
  மழலை - இரண்டாம் பிள்ளையவள்
தனக்கு என்று பாராமல்
  தாய்க்கும் தம்பி தங்கைக்கும்
பணத்தை வாரிக் கொடுக்கின்றார்
  பசியால் நாங்கள் வாடுகிறோம்!

OOOO

பெற்றவங்க - உற்றவங்க
  புத்தி சொல்லிக் கொடுத்திடனும்!
சுற்றம் மனைவி பிள்ளைகளை
  சரியாப் பேணச் சொல்லிடனும்!
முற்றும் முழுதாய்த் தடை விதிக்கும்
  மூளையற்ற குடும்பத்தால்
சற்றும் வாழ்வில் அமைதியில்லை!
  சனியன் வேண்டாம் தொலைத்திடுங்கள்!


OOOO

**நன்றி : நவமணி**
**06-10-2002**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவள் பறந்து போனாளே!



உம்மா வாப்பா உசுப்பி விட
  ஓடிப்போனாள் சவூதிக்கு
சும்மாவேனும் புருஷனென்று
  சொல்லிக்கூடப் போகவில்லை!
இம்மட்டு நாட்களிலே
  எனக்கென் றெதுவும் அனுப்பவில்லை!
உம்மா வாப்பா சம்பளத்தை
  உடனே வேண்டிக்கொள்கின்றார்

○○○○

முன்வீட்டு றாபியிடம்
  முறைப்பாடொன்று அனுப்பியுள்ளாள்
"என்னை இனிமேல் பார்க்காதே
  எவளையேனும் முடித்துக்கொள்"
இந்தப் பதிலை பார்த்தவுடன்
  இன்னும் இருக்க முடியாது
கண்டிப்பாக அவளுக்கு
  கட்டளை கொடுங்கள் காதியாரே!


○○○○

**நன்றி : நவமணி**
**10-2002**



மௌலவி காத்தான்குடி பௌஸ்

# பிரித்துவிட்ட பிலிக்கா!



விரும்பித்தான் இருவரும்
  விவாகமே செய்தோம்
பரபரப்பாய் குடும்பமெல்லாம்
  புதினம் பார்த்தார்கள்
ஒருவரையும் மதிக்காது
  ஓடித்தான் மணமுடித்தோம்!
இருவரும் வாழ்வில்
  இணைபிரியா வாழ்ந்து வந்தோம்!


○○○○

அல்லாஹ்வின் நாட்டம்
  என் மனைவி நோயுற்றாள்!
எல்லா வைத்தியரும்
  இவளைக் கைவிட்டார்!
உள்வயிற்றில் புற்றுநோய்
  ஒன்றுக்கும் இயலாது
இல்லாளை விட்டு விட
  எனக்கு - இடம் தரனும்

○○○○

**நன்றி : நவமணி**
**27-10-2002**

# குடியைக் கெடுத்த குடி!



ஒவ்வோர் இரவும் எனக்கு
ஒருவகைப் புயல் காற்று
செவ்வையாக வளர்த்தென்னை
சேர்த்து விட்ட நாள் முதலாய்
பவ்வியமாய்ப் படுத்துறங்கும்
பாக்கியம் எனக்கில்லை!
ஒவ்வாத கசிப்பை வாயில்
ஊற்றி விட்டு அடிக்கிறார்!

OOOO

மூன்று பிள்ளை தலைமுறையாய்
மூச்சிலும் பேச்சிலும்
நான் சுவாசித்தல்
நாற்றமிகு கசிப்பைத்தான்
ஆண்டவனுக்காய் - எனக்கு
அடிக்கின்ற குடிக்கணவன்
வேண்டாமே! வேண்டாமே!
விடை எனக்குத் தாருங்கள்!


OOOO

நன்றி : நவமணி
03-11-2002





# மண்ணாகிப்போன எண்ணம்!



எங்கள் கிணற்றடியில்
எத்தனை காட்சிகள்
சங்கைமிகு காதியாரே
சமூகம்கொடுத்துப் பாருங்கள்
பங்குபோட்ட மீன்கடைபோல்
பேசனெல்லாம் உடுப்புத்தான்!
மங்கிப்போகும் துணிமணியை
மனைவியவள் துவைப்பதில்லை!

OOOO

யோசித்து யோசித்து
உறக்கத்தில் கழிக்கின்றாள்
போசித்துச் சொன்னாலும்
பேய்போன்று பாய்கின்றாள்
நேசமுள்ள குடும்பத்தில்
நியாயம் நான் கேட்டால்
ஆசைக் காதலனை
அவள்விட்ட சோக மென்பார்!


OOOO

நன்றி : நவமணி
10-11-2002



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குமர்களுடன் குதூகலிப்பு!



எந்தன் புருஷன்தான்!
இரண்டுநாள் உழைப்புத்தான்!
முந்தநாள் போனதற்கு
மூன்றுநாள் "ரெஸ்ட்" எடுப்பார்
அண்டை வீட்டுக் குமர்களுடன்
ஓய்வைக் களித்திடுவார்!
என்ட "பலா" யெல்லாம்
எடுத்துப் பேசிடுவார்!

OOOO

குடும்பம் காணாத
குமர்ப்பிள்ளை கூட்டமுடன்
படுதூறு பேசுவது
பாவம் ஆகாதா?
உடுப்பும் இடையினிலே
எடுத்துக் கொடுக்கின்றார்!
விடுபடுமோ என் வாழ்வு?
விசாரியுங்கள்! தீர்ப்பெடுங்கள்!


OOOO

**நன்றி : நவமணி**
**17-11-2002**



மௌலவி காத்தான்குடி பௌஸ்

# பேச்சுப் பிழையான போது....!



வீட்டுப் பங்கு தந்திடுவோம்
வேறு நகையும் தந்திடுவோம்
ஏட்டில் எடுத்துச் சொன்னார்கள்
இதுவரையும் தரவில்லை
கேட்ட பொழுது மைத்துனர்
கித்துப் பொல்லால் அடித்து விட்டார்
சாட்டுப் போக்கில் ஒரு வருடம்
சடுதியாய் முடிந்தாச்சு!

OOOO

சொன்ன படிக்குச் சீதனமும்
சொர்ணம் எல்லாம் ஒப்படைத்தால்
கண்ணே பெண்ணே என்று நான்
கல்யாணத்தை நடத்திடுவேன்
இன்னும் இளுபறி நடக்குமெனில்
இன்னா - இருக்கும் மனைவியுடன்
ஒண்ணா - வாழ என்றுரைப்பேன்!
ஒரே தலாக்கில் முடிவெடுப்பேன்!


OOOO

**நன்றி : நவமணி**
**24-11-2002**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறுத்த ஓட்டு வதனம்!



கடையில் இருந்து நான் வந்தால்
கலகலக்காள் என் மனைவி!
படையில் செத்த சோகம் போல்
பார்வையிருக்கும் முகம் சிரிக்காள்!
நடையில் கூடத் துடிப்பில்லை!
நரக வாழ்வின் நான் உள்ளேன்
உடையைக் கூட மாற்றாத
ஒருத்தியுடனே வாழ்கின்றேன்!

OOOO

வந்தால் எனக்கு காப்பியில்லை!
வருகைக்காகச் சிரிப்பில்லை!
சொந்தத்தாரை ஆதரிக்க
சோகம் மனதை விடுவதில்லை!
இந்த வாழ்வு எந்தனக்கு
எதற்கு காதியே சொல்லுங்கள்
தொந்தர வின்றி - இப்பெண்ணின்
தொடர்பை அறுத்துத் தாருங்கள்!


OOOO

நன்றி : நவமணி
01-12-2002





# எயிட்ஸ் வைரஸ்!



இவர் வேண்டாம் உடல் நிறையை
ஏதோ சிறிய தொப்புளங்கள்
அவையின் நாற்றம் எந்தனக்கு
அடக்க முடியாத் தொந்தரவு!
தவராஜா டாக்டரிடம்
தவணைமுறையில் காட்டியுள்ளேன்
அவரின் "ரிப்போர்ட்" இவருக்கு
அறிகுறி எயிட்ஸ் எனச் சொன்னார்!

OOOO

துயரமடைந்த என் வாழ்வில்
துணைவனுக்கு பல தடவை
அயலில் உள்ள ஹோட்டலுக்கு
அடிக்கடி போக வேண்டாமென
சுயமாய் எடுத்துச் சொல்லியும் நான்
"சுவிஸ்" பெண்ணை நேசித்தார்
பயங்கரமாய் எயிட்ஸ் நோயால்
பாதிப்புற்றார் இவர் வேண்டாம்!


OOOO

நன்றி : நவமணி
12-2002



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரபுலக வாழ்வு!



வெளிநாடு சென்று என் மனைவி
வெகு காலமாயிற்று
மலீஹா - மகளும் குமராகி
மானத்தோடு காக்கின்றேன்
தெளிவாய் எனக்குப் படமொன்றும்
துணிந்து மடலொன்றும் எழுதியுள்ளாள்
மலையாளத்து - இளைஞனை
மணமுடித்து விட்டாளாம்!

OOOO

மூச்சு நோயால் எந்தனுக்கு
முடியவில்லை உழைப்பதற்கு
ஏச்சும் பேச்சும் அதிகரிக்க
இசைந்தாள் மனைவி வெளிச்செல்ல
ஆசையான அப்பெண்ணை
அனுப்பி வைத்த என் வாழ்வு
போச்சி மலையாளி கரத்துக்கு
புயலாய் "சம்மன்ஸ்" அனுப்புங்கள்!


OOOO

நன்றி : நவமணி
20-12-2002





# குடு குலைத்த குடும்பம்!



குடும்பமெல்லாம் ஒன்றிணைந்து
குடும்பம் சனத்தார் நல்லமென
உடும்புப் பிடியாய் நின்றார்கள்
உடனே முடித்துத் தந்தார்கள்
தொடர்பாய் இருந்த இளைஞனையும்
துண்டித்திதனைச் செய்தார்கள்
நடுமாமா மகன்தான் நமது நஜீம்
நல்லானைத்தான் தடுத்தார்கள்

OOOO

குடும்பம் நல்ல மாப்பிள்ளைதான்
குடு உறுஞ்சி இப்போது
உடுக்கும் பிடவையை விற்கின்றார்!
வீட்டுச் சாமான் திருடுகிறார்!
நடுக்கம் வேறு - முகவடிவும்
நாசமாகப் போயிற்று!
தடுக்க வேண்டாம் காதியாரே!
தயவுசெய்து தலாக் தரனும்!


OOOO

நன்றி : நவமணி
01-2003



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கை நலைக்க வல்லவர்!



நான்கு இடத்தில் பெண் உண்டு!
நானோ நான்காம் பெண்ணாவேன்
போன போன இடத்தினிலே
பெண்ணை நுகரும் ஆண் மகனை
ஏனோ எனக்கும் தாய் தந்தை
எடுத்துத் தந்தார் நானறியேன்?
மானம் எனக்குப் பெரிதாகும்
மனமுவந்து தலாக் தரனும்!

○○○○

பெண்கள் நான்கை ஆண்கட்ட
பெருமானாரின் ஹதீஸ் உண்டு!
என்றார் காதி எடுப்பாக
" இதுவா அந்த சுன்னத்து?
என்று பாய்ந்தாள் ஸீனத்து"!
" இவரோ உழைப்பு இல்லாமல்
பெண்ணை முடித்துச் சீரழிக்க
பத்வா இல்லை அறியுங்கள்"!


○○○○

**நன்றி : நவமணி**
**19-01-2003**





# புதிய வானம் புதிய பூமி!



என்னை முடித்தார் நலமாக
இரு வருடத்தில் இரு பிள்ளைகள்
ஒன்றும் செய்ய முடியாமல்
ஓமான் நோக்கிப் பயணித்தார்
ஒன்று இரண்டு மாதந்தான்
ஒழுங்காய் செலவு அனுப்பிவிட்டார்!
இன்று எந்தன் சகோதரரின்
ஏச்சும் பணமும் மூச்சாச்சு!

○○○○

போன மாதம் கொழும்பு வந்து
போன் எடுத்துக் கதைத்தாரு!
காண ஊரு வருவதற்கு
காலம் அவர்க்குப் போதாதாம்
ஏனோ என்று தேடுகையில்
இன்னொருத்தியை "செட்" பண்ணி
போனார்களாமே கபள்ஸ் போட்டு
போதும் காதியார் இவர் வாழ்க்கை!


○○○○

**நன்றி : நவமணி**
**26-01-2003**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுக்குள் உயிர்!



என்னை நம்பி லண்டனுக்கு
இவளோ வந்தாள் அது உண்மை!
கண்ணே கரும்பே என நினைத்து
கலகலப்பாய்த் தினம் வாழ்ந்தோம்
அன்பின் எந்தன் பிள்ளைகளும்
அமைவாய் அங்கே இருந்தார்கள்
ஒன்றும் குறைவாய் வைக்கவில்லை!
ஒதுங்கிக்கூட வாழவில்லை!

OOOO

இந்த வாழ்வின் இடையினிலே
எந்தன் அயல் இளைஞனுடன்
பந்த பாசம் பல பேசி
பழகி வந்தாள் விட்டு விட்டேன்
சொந்தம் என்று விட்டதுதான்
சிசுவாய் வயிற்றில் வளர்கிறது!
எந்தன் மனைவி இவள் வேண்டாம்!
எடுங்கள்! முடிவு பிரித்திடுங்கள்!


OOOO

நன்றி : நவமணி
02-2003





# சந்தோஷமிழந்த சந்தேகம்!



சந்தேகம் இவர் சந்தேகம்!
சகலதிலும் சந்தேகம்!
சந்தோஷம் வாழ்க்கையிலே
சந்தித்திருந்தால் சந்தோஷம்!
சொந்தத் தம்பி சோதரன்
சுபுஹில் வந்து போனாலும்
எந்தன் மனசு உடைபடவே
எழுப்பும் கேள்வி ஏராளம்!

OOOO

நண்பர் பலரை வீட்டுக்கு
நாளும் கூட்டி வருவாரு
முன்னால் கண்டு சிரித்து விட்டால்
முடிந்தது அமைதி முழு நாளும்
கண்ணில்லாத பெண்மணியும்
கருத்தில்லாத பெண்ணும்தான்
நன்று இவருக்கு - எனக்கொண்ணா!
நாளை தலாக்குத் தாருங்கள்!


OOOO

நன்றி : நவமணி
09-02-2003



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹராத்தில் மிதக்கும் ஹாஜி!



மக்கா சென்றாரு இவர்
மக்கா சென்றாரு!
தக்க ஹாஜி போல் இவர்
தலையடிப்பாரு!
"சக்கில்லாமல்" வங்கியிலே
சல்லி வைப்பாரு!
கக்கும் வட்டிச் சல்லியினைக்
கறிக்கெடுப்பாரு

OOOO

உழைப்பதற்குப் போகாமல்
ஓய்வெடுப்பாரு!
அழைக்கும் சபைக்கு
ஆலிம்களைப் போல் போவாரு!
நிலையில்லாத வட்டிப் பணம்
நெருப்பாய் மாறிடும்
பிழையை உணரா இவரோடு
பிணையலாகாது

OOOO


**("சக்" - அரபுச்சொல் பொருள் - சந்தேகம்)**

**நன்றி : நவமணி**
**16-02-2003**





# மாயக்காரியான வேலைக்காரி!



வீட்டைப் பெருக்க வந்தவள்
வேலைக்காரியாவாளே!
ஆட்டம் போட்டுக் கணவருடன்
ஆசை காட்ட வந்தாளா?
வீடு வந்து பார்வையிட்டால்
விளக்கம் நன்கு துலக்கமுறும்
ஆடும் கட்டில் குசினிக்குள்
அனைத்தும் நடக்கும் இறைசாட்சி!

OOOO

கொழுந்து பறிக்கும் ஊரிருந்து
குழந்தையாக வந்தவளை
முழுக்க எங்க உம்மாதான்
முயற்சி எடுத்து வளர்த்தார்கள்
நிலமை இன்று விதம் மாறி
நிலம் வெடித்து பூகம்பம்!
கழன்று - புருஷன் ஆயாளுடன்
காலம் தள்ளத் தீர்ப்பெடுங்கள்!


OOOO

**நன்றி : நவமணி**
**23-02-2003**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதற்குப் பெயர் உடம்பா?



அவளின் உடம்பு மிக மெலிவு!
அதில் பிரியும் துர்வாடை!
உவகை கொள்ள மனமில்லை!
உடன் இருக்க விரும்பவில்லை!
கவலையோடு வாழ்கின்றேன்
கருத்தை விரிக்கச் சரியில்லை!
தவளை போன்று கிணற்றுக்குள்
தெரிந்த வாழ்வே அவள் தெளிவு!

○○○○

குடும்பப் பெண்ணாய் ஆவதற்கு
கூடிய காலம் டாக்டரிடம்
விடுபடாமல் காட்டித்தான்
வெளியே சத்தம் விளங்காமல்
அடுப்பாய் ஊதி என் வாழ்வை
அவமதித்து விட்டார்கள்
பொடுபோக்காக இருக்காது
புரட்டி வழக்கை முடிவெடுங்கள்

○○○○

நன்றி : நவமணி
02-03-2003





# யாரை யார் வெல்லுவாரோ?



காணக் கணவன் போலிருப்பார்
கல்பிரங்கி செலவளிப்பார்
தீனின் வழியில் தினம் நடப்பார்
தீமையென்றால் அஞ்சிடுவார்
ஆண்டு இருபதாகிறது
அவரால் குழந்தைப் பேறில்லை
நீண்ட மருத்துவ சோதனையில்
நிலமை மோசம் அவர் பக்கம்

○○○○

என்னில் பிழை என்றே தான்
இல்லா - பொல்லா வம்பெல்லாம்
சொன்னார் அன்னார் குடும்பத்தார்
சோதனை முடிவில் அவர் நொந்தார்
கண்ணியமாக என் வாழ்வைக்
கழிப்பதற்கு இலகுவதாய்
அன்னார் குடும்பம் இனி வேண்டாம்
அவரின் வாழ்வும் இனி வேண்டாம்


○○○○

நன்றி : நவமணி
09-03-2003



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போனால் புஸ் வாழ்க்கை!



வீடு தந்தார் என் தந்தை
விதை நிலமும் மிகத் தந்தார்
பாடுபட்டுத் தேடுதற்கு
பல கடைகள் தந்திருந்தார்
தோடு காப்பு தாலியென
தொகையாய் நகையும் எனக்கீந்தார்
ஆடுகிறார் என் புருஷன்
அமேரிக்கா வா என்று!

OOOO

சொத்து பத்து முக்கியம்
சூழல் அங்கு சரியில்லை!
சொத்தாலும் நாம் பிறந்த மண்
சிறப்பு விற்றுப் போகாதே!
நித்தம் "கரைச்சல்" அவர் வந்தால்
நீதம் தரனும் காதிக்கோட்
சத்தியம் அமேரிக்கா நான் போகேன்
சரிப்படாது அவர் வாழ்க்கை


OOOO

நன்றி : நவமணி
16-03-2003





# எஞ்சினைப் பிரி!



வீட்டை வங்கியில் ஈடு வைத்தார்
வீட்டுப் பொருட்களை விற்று விட்டார்
ஓட்டாண்டியாய் இருக்கின்றார்
உழைப்பும் ஒன்றும் கிடையாது
காட்போட் அடித்த வீடொன்றை
கொஞ்ச நாளின் வாடகைக்கு
கேட்டெடுத்தார் அவ்வீட்டில்
கிணறுமின்றி வாழ்கின்றோம்

OOOO

வருடம் ஒன்றில் ஒரு பிள்ளை
வழிமுறையாய்ப் பெற்றதனால்
இருக்கும் பிள்ளைகள் எட்டாகும்
இன்னும் ஒன்று என் வயிற்றில்
பெருக்கப் பிள்ளைகள் என் வாழ்வு
பிரச்சினைகள் இருக்காது
மறுகதையின்றி கணவரினை
மனமிரங்கிப் பிரித்திடுங்கள்


OOOO

நன்றி : நவமணி
23-03-2003



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாயிலும் தாய் பெரிது!



கொட்டும் மழை போல் குடும்பத்தை
  கோபப்பட்டு ஏசிடுவார்!
தொட்டால் சிணுங்கும் இலை போல
  தும்மினாலும் கோபிப்பார்!
அட்டை இரத்தம் குடிப்பது போல்
  அடுக்கும் கதையால் குத்திடுவார்!
வெட்கம் கதையைச் சொல்வதற்கு
  விழிமூடாமல் வாழ்கின்றேன்!

OOOO


எங்கள் குடும்ப உறவெல்லாம்
  இடித்த மா போல் வெண்மைதான்
பங்கமாக இவர் வந்து
  பாசமெல்லாம் பறக்கடித்தார்
தங்கமான என் தாயை
  தாறுமாறாய் ஏசிடுவார்
சங்கையான காதியாரே!
  சனியன்! இவரைத் தொலைத்திடுங்கள்

OOOO

**நன்றி : நவமணி**
**30-03-2003**



# போகட்டும் பொல்லாப்பு!



போன போன இடமெல்லாம்
  புலிபாய்ந்த தடயங்கள்!
ஏனோ தானோ இவர் வாய்க்கு
  இறைவன் பூட்டுப் போடவில்லை!
சோனகச் சண்டை அனைத்திலும்
  சும்மா வாயைப் போட்டிடுவார்
மானத்தோடு மற்றவர்கள்
  மாற - இவர் தான் மாட்டிடுவார்!

OOOO

வீட்டை விட்டு வெளியானால்
  வரும் வரையும் பரிதவிப்போம்
மோட்டுப் பேச்சால் யாரின்று
  முறைத்துக் கொண்டு வருவாரோ?
ஆட்டோ டிரைவர் யாருடனும்
  அடித்துக் கொண்டு வருவாரோ?
கேட்கின்றேன் காதியாரே!
  கல்யாணத்தைத் தலாக்கிடுங்கள்


OOOO

**நன்றி : நவமணி**
**06-04-2003**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறட்டைக் குடும்பம்!



மரம் அறுக்கும் சத்தம் போல்
  மாடு உறுமும் குரல் வனப்பில்
இரவு எல்லாம் இவர் படுத்து
  இறைக்கும் தண்ணீர் இயந்திரமாய்
குறட்டை விடும் சப்தத்தால்
  கொஞ்சமேனும் தூக்கமில்லை!
திறமையான டாக்கடரெல்லாம்
  தேடிப் பார்த்தார் மருந்தில்லை!

OOOO

பிள்ளைகள் எல்லாம் இரவினிலே
  பீதியோடு நடுங்குகிறார்
சில்லறையாய் நித்திரையோ
  சீரழிந்து போகிறது
கல்விகொள்ள முடியாமல்
  கவலை கொண்டார் பிள்ளைகள்
அல்லாஹ் விடத்தில் சாட்டிடுவேன்
  அவரைத் தலாக்குத் தந்திடுங்கள்


OOOO

நன்றி : நவமணி
13-04-2003




மௌலவி காத்தான்குடி பௌஸ்

# காலம் கடந்த ஞானம்!



வாழ்வை விட்டு தலாக் தந்தார்
  வேறு ஒருவரை மணம் முடித்தேன்!
நாளும் எங்கள் நல்வாழ்வு
  நலமாய் போகும் இக்காலை
வாழ்வை விடட்டாம் - அவரோடு
  வாழ வரட்டாம் புதுச் செய்தி!
“கோளின் மேலே கோள்” இரவில்
  கொடுமை இதற்கு என்செய்வேன?

OOOO

விட்டது விட்டது விட்டதுதான்
  விரும்பி திரும்பி சேர்வதெனில்
கட்டிருக்கும் - கணவனோ
  காலமாகிப் போயிடனும்
ஓட்டும் மனசு இல்லாமல்
  விட்டுப் பிரிந்து போயிடனும்
தட்டும் சட்டம் ஒன்றுபட
  தயவாய் இருப்போருடன் வாழு!


OOOO

நன்றி : நவமணி
27-04-2003



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைச் செலவைப் பேணு!



உன்னை விடுவேன் எனச்சொல்லி
உண்மையாக விட்டு விட்டார்
எந்தன் பிள்ளை வளர்ப்பதற்கு
எல்லாம் தருவேன் என்றுரைத்தார்
இன்றுவரையும் காதியாரே
ஒன்றும் எனக்குத் தரவில்லை
புண்மைப்படும் என் வாழ்வில்
புனிதம் சேர்க்கப் பாருங்கள்!

OOOO

தம்பி! தம்பி! உன் பிள்ளை
தலைநிமிர்ந்து வாழும் கால்
உம்பெயர்தான் அதன் முன்னே
ஓங்கி நிற்கும் மறவாதே!
வம்புக் கதைகள் அளக்காதே!
வளர்க்கப் பிள்ளையை பணம் நீட்டு
சும்மா விடாது பெரும் பாவம்
சுமுகமாகத் தீர்த்து வைத்தார்

OOOO

நன்றி : நவமணி
04-05-2003





## மறுமலர்ச்சிக்குழைக்கும் மௌலவி பௌஸ் அவர்கள்....




ஈரான் இஸ்லாமிய குடியரசினால் ஏற்பாடு செய்யப்பட்ட முஹர்ரம் ஆஷூரா விழாவில் குடியரசின் பிரதிநிதி ஹுஜ்ஜதுல் இஸ்லாம் அவர்கள் முன் (அஸ்வர் ஹாஜியார் மண்டபத்தில்) மௌலவி பௌஸ் உரை...



பாணந்துறை ஹேனமுல்லை அஹதிய்யாப் பாடசாலை இஸ்லாமிய தின வைபவத்தில் பாகிஸ்தான் தூதுவருடன் மௌலவி பௌஸ் கண்காட்சியைப் பார்வையிடுகிறார். அருகே அஹதிய்யா உறுப்பினர்கள்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாணந்துறை இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கத்தினால் இலவசமாக மூக்குக் கண்ணாடி வழங்கும் வைபவத்தில் தனவந்தர் மல்டிலெக் மகீன் ஹாஜியாருடனும் மறு மலர்ச்சி உறுப்பிர்னர்களுடனும் மௌலவி பௌஸ் அவர்கள்....



பாணந்துறை ஆதார வைத்தியசாலைக்கு மருந்து உபகரணப் பொருட்களை இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கம் மௌலவி பௌஸ் அவர்களுடன் உதவி அரசாங்க அதிபரிடம் கையளித்த போது எடுக்கப்பட்ட படம்.







பாணந்துறை திக்கலை வீதியை திருத்திய மைக்கும்படி நடைபெற்ற வீதிமறியல் போராட் டத்தில் மௌலவி பௌஸ் அவர்கள்...



முன்னாள் கலாசார அமைச்சர் லக்ஷ்மன் ஜய கொடி அவர்களுடன் மௌலவி பௌஸ் அவர்கள்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாணந்துறை சர்வமதப் பெரியார்களுடன் மௌலவி பௌஸ் அவர்கள்...




பேராசிரியர் அல்லாமா உவைஸ் அவர்களின் புத்தங்களை தென்கிழக்குப் பல்கலைக் கழகத் திற்கு கையளிக்கும் வைபவத்தில் மௌலவி பௌஸ் அவர்கள்....

படங்கள் :
எம்.கே.எம். அஸ்வர் - ஏ.எல்.எம். சத்தார்
படங்கள் ஒருங்கிணைப்பு : எம்.கே.எம். அஸ்வர்
(செயலாளர் இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பேசும் பேனா.....

இன்று முன்னணியில் திகழும் எழுத்தாளர்களோடு சேர்த்து முன் மொழியக்கூடிய பேராற்றல் படைத்தவரே கவிஞர் காத்தான்குடி பௌஸ் என்றால் அது மிகைவார்த்தையல்ல, தகைவார்த்தையாகும்.

1974 முதல் வித்தியாசமான போக்கில் தனக்கென ஒரு தனித்துவமான பாதையை வகுத்து எழுதிக் குவித்துக் கொண்டிருக்கிறார். இவரது பேனா பேசாத விடயங்களே இல்லையெனலாம். கவிஞர் காத்தான்குடி பௌஸ் இலக்கியத்தில் எதைத் தொட்டாலும் அவை உயர்தரத்துடன் ஒளிர்வது அவரது ஆற்றலுக்கு சிறந்த ஆதர்ஷனமாகும்.

எழுதுவதோடு அவருக்கு கைகொடுத்து நிற்பது கம்பீரமான குரல் வளமாகும். கவியரங்கம், மணி மொழிகள், ரமழான் சிந்தனை, நினைவு தினப் பேச்சு, பொன்மொழிகள், கதைகள் போன்ற நிகழ்ச்சிகள், வானொலி தொலைக்காட்சியில் இடம்பெறும் போதும் அவற்றுக்கு அணி சேர்ப்பது இவரது மதுரமான குரல் எனலாம்.

கவிதை, சிறுகதை, நாடகம், வில்லுப்பாட்டு, உரைச்சித்திரம் என பலதுறைகளிலும் தொட்டு எழுதும் இவர் பழகுவதற்கு மிக இனியவர்.

அவரின் எழுத்துப் பணிகள் என்றும் வாழட்டும்.

- திக்குவல்லை ஸப்வான்
சாமஸ்ரீ நிர்மாணசூரி - கலைச்சுடர்
பல்கலை வித்தகர்

TYPESET & COVER PAGE DESIGNED BY : A. H. AHAMED ASLAM
VISUAL COMPUTER SYSTEM # 391, SCHOOL ROAD, HENAMULLA, PANADURA.
HOTLINE : 0714-171585 / E-MAIL : visualcomsystem@gmail.com